உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.665/2023

| | |
|---|---|
| பெயர் | :டாக்டர் .K.ரவிச்சந்திரன்(அ.சா.13) |
| தகப்பனார் பெயர் | :கருப்பர் |
| கணவர் பெயர் | : |
| வயது | :60 |
| கிராமம் | :மதுரை |
| வட்டம் | :மதுரை |
| தொழில் | :ஜெயம் மருத்துவமனை, மதுரை, எலும்புமுறிவு அறுவை சிகிச்சை நிபுணர் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

26.03.2026

முதல் விசாரணை:

மனுதாரர் சேதுராமன் என்பவர் 26.06.2017 அன்று மதுரை ஜெயம் மருத்துவமனையில் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக சிகிச்சை வேண்டி உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். மேற்படி சேதுராமன் என்பவர் நேரடியாக எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தாரா அல்லது வேறு மருத்துவமனையில் இருந்து பரிந்துரையின் பேரில் வந்தாரா என்ற விபரம் கைவசம் இல்லை. அவரை பரிசோதனை செய்த போது, அவருக்கு வலது காலில் உள்ள 2 எலும்புகளும் முறிந்திருந்தது. மேலும் இடது உள்ளங்கையில் உள்ள மெட்டாகார்பல் எனப்படும் உள்ளங்கை எலும்பு முறிவு இருந்தது. இந்த காயங்களுக்காக சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சை முடிந்து அவர் 01.07.2017 அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட 2 காயங்களும் கொடுங்காயங்கள் என்று என்னால் சான்று வழங்கப்பட்டது. சாட்சியிடம் காயச்சான்றிதழ் காட்டப்பட்டு சாட்சி அதை பார்வையிட்டு சரிதான் என்று ஒப்புகொள்ளவே மேற்படி காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி காயம் கொடுங்காயம் என்று நான் சான்றளித்துள்ளேன். வேறு விபரங்கள் கைவசம் இல்லை. காவலர்கள் விசாரித்தார்கள் நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

மேற்படி காயம்பட்ட சேதுராமன் என்பவருக்கு சிகிச்சை அளித்ததாக ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை, ஆனால் சிகிச்சை அளித்தது உண்மை தான். மேற்படி அ.சா.ஆ.6 காயச்சான்றிதழில் 26.06.2017 அன்று இரவு 7.00 மணிக்கு மருத்துவமனை வந்ததாகவும் அவரை பரிசோதனை செய்ததாகவும் குறிப்பு உள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது முதல் விசாரணையில் இரவு 9.45 மணியளவில் சேதுராமன் எனது மருத்துவமனைக்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை. 26.06.2017 அன்று இரவு 9.45 மணியளவிற்கு காயம்பட்ட சேதுராமன் என்பவர் சிகிச்சைக்கு ஆஜரானார் என்று போலிஸ் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சிகிச்சைக்கு அவர் முன்பே வந்துவிட்டார். என்னை பார்த்தது 9.45 மணியளவு என்று குறிப்பிட்டிருந்தேன். மேற்படி அ.சா.ஆ.6 காயச்சான்றிதழில் நான் மருத்துவமனையில் டியூட்டி மருத்துவராக பணியில் இருந்தது என்ற குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர நான் சிகிச்சை அளித்ததாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி நான் சொன்ன காயங்கள் எல்லாம் தவறி நிலைதடுமாறி கீழே விழுந்து ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது என்றால் உண்டு. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து காயச்சான்றிதழ் வழங்கவில்லை என்றும், காயம்பட்ட நபருக்கு நான் சிகிச்சைஅளிக்காமல் காயச்சான்றிதழ் வழங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.26 10:16:21 +0530

Assistant Sessions Judge

Melur